# கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை

## சட்டபீடம்

## சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு III, 2019

## வியாபாரச் சட்டம்

(மூன்று மணித்தியாளம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்)

---

01. அ). 'இடரானது எல்லா நேரத்திலும் பொருளைக் கொண்டிருக்கும் திறத்திடமே உள்ளதென, பொருட்கள் விற்பனையில் இடர் கைமாறுதல் தொடர்பான விதிகளானவை கருதுகின்றன.'

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? நியதிச்சட்ட ஏற்பாடுகளாலும் தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்களினாலும் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

ஆ). வெள்ளவத்தையில் உள்ள Wijedasa என்பவர் பொரளையில் உள்ள Ceylon Tea Ltd இடமிருந்து 100 கிலோ தேயிலைக்கான கொள்வனவுக் கட்டளையை விடுத்தார். குருநாகலையில் உள்ள Amaradasa and Company Ltd உம் அனுராதபுரத்திலுள்ள Ryan and Company Ltd உம் முறையே 200 மற்றும் 400 கிலோ தேயிலைக்கான கொள்வனவுக் கட்டளையை குறித்த Ceylon Tea Ltd இடம் விடுத்தன. Ceylon Tea Ltd இனால் 700 கிலோ எடையுள்ள தேயிலை மரக்கொள்கலன்களில் அடைக்கப்பட்டு குறித்த மூன்று வாங்குனர்களுக்கும் லொறி மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. Wijedasa வின் கொள்வனவுக் கட்டளையானது வெள்ளவத்தையில் ஒப்படைக்கப்பட்டது. லொறியானது குநாகலை நோக்கிச் செல்லும் போது விபத்துக்கு உள்ளாகியதுடன் மிகுதித் தேயிலை ஒப்படைக்கப்படவும் முடியவில்லை. மேற்கூறிய சூழ்நிலை தொடர்பில் உமது சட்ட ஆலோசனையை Ryan and Company Ltd இயக்குனர்கள் நாடுகின்றார்கள்.

நியதிச்சட்ட ஏற்பாடுகளுடனும் தீர்ப்புச்சட்ட அதிகார ஆதாரங்களுடனும் தொடர்புறுத்தி அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

02. Thilak என்பவன் ரூபா.10,000/= பெறுமதியான காசோலை ஒன்றினை வரைந்து 'கைமாற்றக்கூடியதல்ல' என்று அதனைப் புறக்குறிப்பிட்டான். அவன், குறித்த காசோலையில் பணம் பெறுனராக David Fernando வின் பெயரை இட்டு நிரப்புமாறு தனது லிகிதரான Meryl என்பவனை அறிவுறுத்தினான். Meryl தனிப்பட்டமுறையில்

Saman இடம் கடன்பட்டிருந்தான். அவன் அக்காசோலையின் பெறுமதியை ரூபா.100,000/= என மாற்றியதுடன் அதனை Saman இக்கு செலுத்தக் கூடியதாக ஆக்கினான். பின்னர், Meryl அக்காசோலையை Saman இடம் ஒப்படைத்தான். சமன் அதனை Bimal என்பவனுக்கு கைமாற்றல் செய்ய, அவன் அதனைப் பெறுமதிக்குப் பெற்றான். Bimal பணம் பெறுவதற்காக அக்காசோலையைச் சமர்ப்பித்தபோது, வங்கி கொடுப்பனவை மறுத்தது.

பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளையும் தீர்க்கப்பட்ட வழக்குகளையும் ஆதாரங்காட்டி திறத்தவர்களது உரிமைகளையும் பொறுப்புடைமைகளையும் ஆராய்க.

03. Marsha என்பவள் புத்தம் புதியதும் ஒருவரது நோய் எதிர்பு சக்தியை மேம்படுத்தவல்லதென மருத்துவ மற்றும் விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்டதுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த 'Seamy' யோகட்டின் பொதியொன்றைக் கண்டாள். அவள் இலவசமாக வழங்கப்பட்ட மாதிரியொன்றினைச் சுவைத்தபோது அது புத்தம் புதியதெனக் கண்டுகொண்டாள். தனது குடும்பத்தின் பாவனைக்காக இருபது யோகட்டுக்களை Marsha கொள்வனவு செய்தாள். இந்த யோகட்டுக்களில் இரண்டை அருந்திய பின்னர் அவளது ஐந்து வயதான மகன் வாந்தியெடுத்ததுடன் கடுமையான வயிற்றுவலியாலும் பாதிக்கப்பட்டான். Marsha தனது சிறிய மகனை மருத்துவமனையில் அனுமதித்தாள். மானிட பாவனைக்குப் பொருத்தமற்றதான யோகட்டுக்களை அருந்தியமையாலேயே வயிற்றுவலி ஏற்பட்டதென மருத்துவர் Marsha விற்கு விளக்கமளித்தனர்.

அந்த யோகட்டுக்களை தான் வாங்கிய நேரத்தில், 'Creamy' எனும் வியாபாரக்குறியினைக் கொண்ட மற்றொரு யோக்கட் உற்பத்தியாளர் தமது பதிவுசெய்யப்பட்ட வியாபாரக்குறியின் உரிமையை 'Seamy' யோகட் நிறுவனமானது மீறியுள்ளதெனக் கோரி அதற்கெதிராக கொழும்பு மேல் நீதிமன்றிடமிருந்து தடையானை ஒன்றினைப் பெற்றிருந்ததை Marsha பின்னர் அறிந்து கொண்டாள். 'Seamy' யோகட் நிறுவனத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய Marsha விரும்புகிறாள்.

பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளுடனும் தீர்ப்புச்சட்ட அதிகார ஆதாரங்களுடனும் தொடர்புறுத்தி மேற்குறிப்பிட்ட சூழ்நிலையை நுணுக்கமாக மதிப்பிடுக.

04. பின்வரும் சந்தர்ப்பங்களில் எழுந்துள்ள சட்டப் பிரச்சனைகளை ஆராய்க:

அ) காசோலையொன்றின் புறக்குறிப்பிடுனரான Piyal என்பவன் அதனை Lal என்பவனுக்கு பிரதிபலன் எதுவுமின்றிக் கைமாற்றினான். Lal உம் அதனை Sena என்பவனுக்கு பிரதிபலனின்றி கைமாற்றினான். சேனா அதனை Perera என்பவனுக்குப்

பிரதிபலனுக்காகக் கைமாற்றினான். Perera அதனை பிரதிபலனின்றி Mala என்பவளுக்குக் கைமாற்றினான்.

Mala அக்காசோலையின் பெறுமதியினை பெரேரா அல்லது பியாலிடமிருந்து அறவிட முடியுமா என்பதைக் காரணங்களுடன் விளக்குக.

ஆ) Banu விற்குச் செலுத்த வேண்டியதான காசோலையொன்றினை Anil என்பவன் திருடுவதுடன் அதனை Cyril என்பவனுக்கு கைமாற்றுவதற்காக Banu வின் கையெழுத்தினை மோசடியாகவும் இடுகின்றான். Cyril அக்காசோலையை பெறுமதிக்குப் பெறுவதுடன் அதனை ஒரு திருடனிடமிருந்து தான் பெற்றிருப்பதையும் அறியவில்லை. Cyril அக்காசோலையை பணம் பெறுவதற்காக சமர்பிக்கும்போது அது மதிப்பளிக்க மறுக்கப்படுகிறது. Cyril அக் காசோலையை அதன் அனைத்து முந்தைய திறத்தவர்களுக்கு எதிராகவும் செயற்படுத்த விரும்புகிறான்.

Cyril இன் சட்ட உரிமைகள் பற்றி அவனுக்கு ஆலோசனை வழங்குக. கொண்டுவருனருக்கு செலுத்தப்படக்கூடிய காசோலையொன்றினை Anil களவாடி அதனை Cyril இடம் கையளிப்பானாயின் உமது விடையானது மாறுபடுமா?

இ) Mohan என்பவன் பொருட்களுக்கான கொடுப்பனவாக ரூபா.10,000/= க்கான காசோலையொன்றினை Dias என்பவன் பெயரில் வரைகின்றான். Dias அக் காசோலையை, 'Amal Fernando வுக்கு மட்டும் செலுத்தவும்' எனப் புறக்குறிப்பிட்டு Amal Fernando விடம் கையளிக்கிறான். Amal Fernando அக்காசோலையை இராமன் என்பவனிடம் தான் பெற்ற கடனை அடைப்பதற்காக அவனுக்குக் கைமயாற்றம் செய்ய விரும்புகின்றான்.

ஈ) 'பணம் பெறுவோன் கணக்கு' எனும் சொற்களைச் சேர்த்து காசோலையொன்றினை குறுக்குக் கோடிடுவது வரைபவனுக்கு அதிக பாதுகாப்பாக அமையும் எனலாம்".

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? அது எங்ஙனம் வரைபவனுக்குப் பாதுகாப்பளிக்கும் என்பதனை விளக்குக.

05. அ. மாத்தறையிலுள்ள மாம்பழக் கொள்வனவாளன் ஒருவன் மாத்தறையில் ஒப்படைக்கப்பட வேண்டியதாக, வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மாம்பழங்கள் பொதியொன்று புயல் காரணமாக தாமதமான பயணம் ஒன்றின் பின்னர், கொழும்புத் துறைமுகத்தினை வந்தடைந்தது.அந்த மாப்பழங்களை அவற்றின் சேரிடமான மாத்தறைக்கு அனுப்புவதில் மேலும் தாமதத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடிய புகையிரத சேவை வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்ததால், அப்புகையிரதக் கம்பனியானது அம்மாம்பழங்களை உடனடியாக கொழும்பில் உள்ள *மனிங்* சந்தையில் விற்பதற்குத் தீர்மானித்தது.

விற்பனை மூலம் ஈட்டப்பட்ட விலைக்கும் மாத்தறையின் சந்தை விலைக்கும் இடையிலான வேறுபாட்டுக்கு முகவரென்ற வகையில் அப்புகையிரதக் கம்பனி பொறுப்பாகுமா என ஆராய்க.

ஆ. 'குறித்த தத்துவத்தினைக் கையளிப்பதற்கு வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ அதிகாரம் வழங்கப்பட்டாலன்றி, அப் பணியினை முழுமையாக நிறைவேற்றுவதில் முகவரொருவர் தனிப்பட்டமுறையில் செயற்படுவதற்கு முதல்வருக்கான கடமை ஒன்றினைக் கொண்டுள்ளார்'

மேற்போந்த கூற்றினை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி நுணுக்கமாக ஆராய்க.

06. "கடல்வழிக் காவுனரின் பொறுப்புடைமையினை ஆளும் விதிகளே சர்வதேச கடல்சார் சமவயாங்களின் மையப்பகுதியாக அமைகின்றன. அவை காவுனருக்கும் சரக்கு உரிமையாளரது நலன்களுக்கும் இடையிலான உரிமைகளையும் பொறுப்புடைமைகளையும் சமநிலைப்படுத்துவதுடன் இடர்களின் ஒதுக்கீடுகளையும் ஒழுங்குபடுத்துகின்றன. காலப்போக்கில் வளர்ச்சியடைந்த நடைமுறையானது, காவுனருக்கும் சரக்கு நலனுக்கும் இடையிலான இடர்களை கப்பல் ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டில் (Bill of Lading) ஒதுக்கி வழங்குவதற்கான ஒரு முயற்சியினையே கண்டுள்ளது எனலாம்."

சர்வதேச வர்த்தகத்தில் பிரதானமான ஆவணமாகக் கொள்ளப்படும் கப்பல் ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு (Bill of Lading) ஒன்றின் சிறப்பியல்புகள் மற்றும் செயற்பாடுகள் மீது கவனம் குவித்து, மேற்போந்த கூற்றினை, நன்கு அறியப்பட்ட சர்வதேச விதிகள், இலங்கையின் 1982ம் ஆண்டின் 21ம் இலக்க கடல் மூலமான பொருள் காவுகைச் சட்டம் மற்றும் தீர்ப்புச்சட்டம் என்பவற்றுடன் தொடர்புறுத்தி நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.

07. தேவைப்படும் சட்டக்கோட்பாடுகளுடனும் தீர்ப்புச் சட்டத்துடனும் தொடர்புறுத்தி பின்வரும் திறத்தவர்களுக்கு ஆலோசனை வழங்குக:

அ. இலங்கையின் பிரபல்யமான தொலைக்காட்சிக் கம்பனியான Episton என்பது மொத்தமாக ரூபா.5.5 மில்லியன் விலையில் 44" தட்டைத்திரைத் தொலைக்காட்சிகள் 1000 த்தினை கொழும்புத் துறைமுகத்துக்கு அனுப்புமாறு CIF விதிகளின் கீழ் Sony என்ற கம்பனிக்குக் கொள்வனவுக் கட்டளையொன்றினை விடுத்தது. அக்கொள்வனவு கட்டளைக்கு அமைய தொலைக்காட்சிப் பெட்டிகளை Sony ஆனது ஜப்பான் துறைமுகமான அகிடாவிற்கு அனுப்பியதுடன் அதன் பின்னர் Episton இனால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட கப்பலான *Costerita Express* என்பதில் குறித்த சரக்குகள் ஏற்றப்பட்டன. பொருட்களை ஏற்றுவதற்குப் பொறுப்பாக இருந்த *Costerita Express* இன் ஊழியர் அத்தொலைக்காட்சிகளின் திரையின் அளவானது

விற்பனை ஒப்பந்தத்தில் உடன்பட்டவாறாக 44" அன்றி 40" இருந்தமையைக் கவனிக்கத் தவறினார். எனினும் கப்பலின் ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டானது (Bill of Lading) ஏற்றப்பட்ட தொலைக்காட்சிகளின் அளவு 40" என குறிப்பிட்டது. Episton கம்பனியானது ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டின் ஏற்பினை Sony கம்பனிக்கு தெரிவித்ததுடன் அதன் மீது தொலைக்காட்சிகளுக்குரிய முழுப் பெறுமதியையும் செலுத்தியது.

கடற்பயணத்தின் போது *Costerita Express* கப்பலின் சரக்குத் தூணிடைப்பகுதி ஒன்றில் தீ பற்றியதுடன், தீயணைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் Episton இனது கொள்வனவுக் கட்டளையின் 20% சேதத்திற்கு உள்ளாகியது. அந்த ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டில் உள்ள தவறானது *Costerita Express* கப்பல் கொழும்பினை வந்தடைந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. தனக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக Episton கம்பனியானது *Costerita Express* உரிமையாளர்கள் மீது வழக்கினைத் தாக்கல் செய்தது.

*Costerita Express* உரிமையாளர்கள் உமது சட்ட ஆலோசனையை நாடுகின்றார்கள்.

ஆ) ஒஸ்ரேலியாவின் பல்தேசியக் கம்பனியொன்றான 'Spice Cost' என்பது இலங்கைக் கம்பனியொன்றான 'Ceylon Spice' என்பதிடமிருந்து 250 kg இலங்கைக் கறுவாவினைக் FOB விதிகளின் கீழ் கொள்வனவு செய்ததுடன் கொள்வளவு விலையின் அரைப்பங்கினை முற்கொடுப்பனவாகவுஞ் செலுத்தியது. அந்தக் கறுவாவினைப் பொதிசெய்யும் பணியினை, விநியோகக் கம்பனியொன்று பொறுப்பேற்றதுடன் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட கப்பல் ஒன்றில் கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றப்படுவதற்காக 'Spice Cost' கம்பனியின் பெயரும் முகவரியும் அப் பொதிப்பெட்டிகளில் குறியிடப்பட்டன. கனரகவாகன சாரதிகளின் வேலை நிறுத்தம் காரணமாக, குறித்த விநியோகக் கம்பனியொனது நியாயமான ஒரு காலப்பகுதிக்குள் பொதிகளை ஏற்றுமதி செய்வதற்கென அனுப்பி வைப்பதற்குத் தவறியது. அதன் விளைவாக, அந்த விநியோகக் கம்பனியானது கப்பலில் பொதியை அனுப்பத் தவறிவிட்டது. 'Spice Cost' கம்பனியே கப்பலில் ஏற்றுவதற்குப் பொறுப்பு என 'Ceylon Spice' கம்பனியானது வாதிடுவதுடன் மிகுதிக் கொள்வனவு விலையையும் கோருகின்றது.

'Spice Cost' கம்பனியின் சட்ட ஆலோசகரென உம்மைக் கருதிக் கொண்டு உமது கட்சிக்காரருக்குச் சார்பான வாதங்களை வரைக.

---